# தமிழ்நாடு நர்சிங் கவுன்சில்

## சாந்தோம், சென்னை-4

Ph :044-46786539 email: info@tamilnadunursingcouncil.com www.tamilnadunursingcouncil.com

## அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்வி நிறுவனங்கள் பற்றிய தகவல் 2018-2019

தமிழ்நாட்டில் நர்சிங் பள்ளி / கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் மற்றும் இந்தியன் நர்சிங் கவுன்சில் ஆகும். இத்தகைய கவுன்சில்களின் அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்லூரிகளில் பயில்வதே முறையான கல்விக்கு வழிவகுக்கும். அதனால் நர்சிங் படிப்பு பயில விரும்பும் மாணவ / மாணவியர்கள் தாங்கள் தேர்வு செய்யும் நர்சிங் பள்ளி அல்லது கல்லூரியானது அங்கீகாரம் பெற்றுள்ளதா என்பதை அறிந்து கொள்ள எங்களது இணையதளத்தில் பார்த்து அறிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இணையதள முகவரி **www.tamilnadunursingcouncil.com**

## பொதுமக்கள் கவனத்திற்கு

நர்சிங் பயிற்சி (Nursing Training) என்ற பெயரில் பல பெரிய / சிறிய மருத்துவமனைகள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள், கீழ்கண்ட பெயர்களில் போலி நர்சிங் பயிற்சிகளை நடத்தி நர்சிங் டிப்ளமா மற்றும் சர்டிபிகேட்களை வழங்குகிறார்கள். இந்த சர்டிபிகேட்களை இக்கவுன்சிலில் பதிவு செய்ய முடியாது.

- டிப்ளமா இன் நர்சிங் அஸிஸ்டென்ட் கோர்ஸ் (Diploma in Nursing Assistant Course) (6 months / 2 years)
- டிப்ளமா இன் நர்சிங் (Diploma in Nursing) (2 years)
- டிப்ளமா இன் ஃபர்ஸ்ட் எய்டு நர்சிங் (Diploma in First Aid Nursing) (2 years)
- வில்லேஜ் ஹெல்த் நர்சிங் (Village Health Nursing) (2 years)
- டிப்ளமா இன் நர்சிங் எய்டு (Diploma in Nursing Aid) (2 years)
- டிப்ளமா இன் ஃபர்ஸ்ட் எய்டு & ப்ராக்டிகல் நர்சிங் (Diploma in First Aid & Practical Nursing)
- டிப்ளமா இன் ப்ராக்டிகல் நர்சிங் (Diploma in Practical Nursing) (1 yr / 2 yrs)
- சர்டிஃபிகேட் இன் நர்சிங் (Certificate in Nursing) (1 year)
- அட்வான்ஸ்டு டிப்ளமா இன் நர்சிங் அஸிஸ்டென்ட் (Advanced Diploma in Nursing Assistant) (2 years)
- டிப்ளமா இன் ஹெல்த் அஸிஸ்டென்ஸ் (Diploma in Health Assistance (1 yr)
- நர்ஸ் டெக்னீஷியன் கோர்ஸ் (Nurse Technician Course)
- ஹெல்த் கைடு கோர்ஸ் (Health Guide Course)
- சர்டிஃபிகேட் இன் ஹெல்த் அஸிஸ்டென்ட் (Certificate in Health Assistant)
- சர்டிஃபிகேட் இன் ஹாஸ்பிட்டல் அஸிஸ்டென்ட் (Certificate in Hospital Assistant)
- சர்டிஃபிகேட் இன் பெட்ஸைடு அஸிஸ்டென்ட் (Certificate in Bedside Assistant)
- சர்டிஃபிகேட் இன் பேஷண்ட் கேர் (Certificate in Patient Care)
- சர்டிஃபிகேட் இன் ஹோம் ஹெல்த் கேர் (Certificate in Home Health Care)

தமிழ்நாடு நர்சிங் கவுன்சிலின் சட்டப் பிரிவு 12 (a) (1) மற்றும் (2)ன் படி, இதுப்போன்ற போலி படிப்புகளை நர்சிங் என்ற பெயரில் நடத்தும் நிறுவனம், சங்கம் மற்றும் பல்கலைக்கழகங்கள் மீது அபராதமும் உரிய நடவடிக்கையும் எடுக்கப்படும் என இந்த பொது அறிக்கை மூலம் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் சென்னை உயர்நீதி மன்ற ஆணை WP No.16556 of 2014 நாள் 13.04.2015-ன் படி போலி நர்சிங் பயிற்சி நிறுவனங்களின் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மேற்கண்ட அங்கீகரிக்கப்படாத படிப்புகளை படித்தால் அரசுப்பணியில் சேர முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இந்த மாணவ மாணவியர்கள் எந்த ஒரு மருத்துவமனைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட செவிலியராக பணிபுரிய இயலாது மற்றும் நர்சிங் கவுன்சிலில் இப்படிப்பினை பதிவு செய்ய இயலாது என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். அவ்வாறு பணிபுரிவதை நர்சிங் கவுன்சிலின் கவனத்திற்கு தகவல் வந்தால் கவுன்சிலின் சட்டப்படி அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே இத்தகைய நிறுவனங்கள் தானாக முன்வந்து மேற்கூறிய பயிற்சிகளை நிறுத்திவிட அறிவுறுத்தப்படுகிறார்கள். இல்லையெனில், அத்தகைய நிறுவனங்களின் மீது கவுன்சிலின் விதிகளின்படி அபராதமும் மற்றும் சட்டப்படி உரிய நடவடிக்கையும் எடுக்க நேரிடும் என்பதை இந்த அறிக்கையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

பதிவாளர்

தமிழ்நாடு செவிலியர் குழுமம், சென்னை 600 004.

செ.ம.தொ.இ/818/வரைகலை/2018

தினத்தந்தி 24/6/2018